**கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவைக் குழுக்கள் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** கம்பஹா மாவட்டத்தின் 26 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்கான கம்பஹா மாவட்டத்தில் 26 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கைகளில் 26 கமநல சேவைக் குழுக்களுக்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கு காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்கலாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கியானது கமநல அபிவிருத்திக் குழுவின் ஒரு அங்கமாக இருப்பதால், கமநல வங்கி தொடர்பான அனைத்து கணக்குகளையும் கமநல குழுவின் ஆண்டுக் கணக்கில் உள்ளடக்கி ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 26 குழுக்கள் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின 04/2012 ஆம் இலக்க 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின 5.6(i) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின 04/2012 ஆம் இலக்க 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின 5.6(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 07 இன் 26 ஆம் பிரிவின் பிரகாரம் 26 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை மற்றும் அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 26 கமநல சேவைக் குழுக்களின் காணி மற்றும் கட்டிடங்கள், 5 குழுக்களுக்கான கணினி பாகங்கள் மற்றும் பிரதியெடுக்கும் இயந்திரம் மற்றும் விவசாய வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் மதிப்பு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி பெறப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுக்களுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 08 கமநல சேவைக் குழுக்களின் மொத்தம் ரூபா 61,406 ஆன் செலவுகள் அதிகமாகவும் , 03 குழுக்களின் மொத்தம் ரூபா 1,318,281 ஆன வருமானம் அதிகமாக மற்றும் 04 குழுக்களின் ரூபா 75,352 ஆன வருமானம் குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், 05 குழுக்களின் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 295,289 அதிகமாகவும், 02 குழுக்களின் நடைமுறைச்சொத்துக்கள் ரூபா 172,002 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், 07 குழுக்களின் ரூபா 1,452,117 ஆன நடைமுறைப்பொறுப்புகள் குறைவாகவும், மேலும் 04 குழுக்களின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 958,500 அதிகமாகவும் காட்டப்பட்டிருநததுடன் இன்னும் 02 குழுக்களின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 403,520 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | இந்தப் பிழைகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாத கணக்குகளில் சீராக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சரியாகக் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும்போது கணக்காண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் சீராக்கப்படுவதற்கும், நிதிக்கூற்றுக்கள் முழுமைளாக மற்றும் சரியாக சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 07 கமநல சேவைக் குழுக்களில் தேய்மானம் செய்யப்பட்டு முடிக்கப்பட்ட 04 கணினிகள், கணினி அமைப்புகள், கணினி பாகங்கள், இயந்திரங்கள், பிரிண்டர் ஒன்று, தண்ணீர் மோட்டார் ஒன்று, நிலத்தராசு ஆகிய நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துகள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.3.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறைவேற்றுச் செயலாளரின் அங்கீகாரமின்றி 04 கமநல சேவைக் குழுக்களின் மொத்தம் ரூபா 91,670 ஆன 37 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் முறையான அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செலுத்தப்படுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான ரூபா 984,174 ஆன கணக்கு மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல், பிணை வைப்பு பதிவேடு, நிலையான வைப்புச் சான்றிதழ் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அக் கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | போதியளவு தகவல்கள் இருக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **2000** இன் **46** ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்<br>------------------------- | | | |
| | 52 ஆம் பிரிவு | ஒவ்வொரு பருவத்திற்கு முன்பும் கமநலக் குழுக்களில் பிரதேசத்திற்கான விவசாயச் செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட | சட்டத்தின் 52(1) பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரதேச அலுவலருக்கு | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியபோதிலும், 26 குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எழுத்துப்பூர்வமாக அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>--------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அல்லது பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் கமநல குழுக்கள் தொடர்பாக உள்ளக கணக்காய்வொன்றை மேற்கொண்டு விற்கு உட்படுத்தப்பட்டு அந்த அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் II ஆம் பகுதியின் 09 ஆம் பிரிவு | 56 கமநல சேவைக் குழுக்களுக்கான பணம் அல்லது கையிருப்பு தொடர்பாக செயல்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களாலும் பிணை வைக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அபிவிருத்தி அலுவலர், நிறைவேற்றுச் செயலாளர், கமநல வங்கி எழுதுநர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் ஆகியோரால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்புக்களை அறவிடுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை<br>-------------------------- | | | |
| | 2013 மார்ச் 08 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க | கமநல சேவை நிலையத்தின் வளாகத்தை பயன்படுத்தி விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை, | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை | தற்காலிக சிற்றுண்டிக்காலை நடாத்துதல் விவசாய அமைப்புகளின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான கமநல குழுக்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் 23 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 13,295,888 ஆன மிகையாகவும், 26 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,148,416 ஆன மிகையாகவும் இருந்தன. 2021 ஆம் ஆண்டில் 22 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 8,765,390 ஆன மிகையாகவும், 26 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,855,346 ஆன மிகையாகவும் இருந்தன.

**2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

i. மீளாய்வாண்டில் 23 கமநல சேவைக் குழுக்கள் ரூபா 13,295,888 ஆன மிகையை ஏற்படுத்தி இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டில் 22 கமநல சேவைக் குழுக்களின் மிகை ரூபா 8,765,390 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மிகையில் ரூபா 4,530,498 ஆன அதிகரிப்பொன்று காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 03 கமநல சேவைக் குழுக்களின் பற்றாக்குறை ரூபா 481,850 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டில் 04 கமநல சேவைக் குழுக்களின் பற்றாக்குறை ரூபா 469,463 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பற்றாக்குறையின் அதிகரிப்பு ரூபா 12,387 ஆக இருந்ததுடன், மிகையின் அதிகரிப்பு சீராக்கப்பட்டமையால் ஒட்டுமாத்த மிகை ரூபா 4,518,111 ஆல் அதிகரித்திருந்தது.

ii. கமநல சேவைக் குழுக்களின் அடிப்படை பணிப்பொறுப்பொன்றென உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகள், விவசாய உபகரணங்கள் உட்பட விவசாய பண்டங்களை விற்பனை செய்தல் ஆகக் காணப்படுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக 26 கமநல சேவைக் குழுக்களின் மொத்த விற்பனையின் கூட்டுத்தொகை ரூபா 37,910,713 ஆக இருந்தது. முழு மொத்த இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 12,109,119 ஆக இருந்தமையால் அதன்படி, ஒரு கமநல சேவைக் குழுவின் வருடாந்த சராசரி விற்பனைப் பெறுமதி ரூபா 1,458,104 தொகையாக காணப்பட்டதுடன், சராசரி மொத்த இலாபம் ரூபா 465,735 தொகையாக இருந்தது

iii. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 26 கமநல சேவை குழுக்களின் நிதி நிலைமை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| | | --------- |
| மொத்தச் சொத்துக்கள் | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | = | 142,704,377 |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | = | 94,773,675 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 76,862,118 |

| | | |
|---|---|---|
| நீண்ட கால கடன் பெறுமதி | = | 4,645,264 |
| திரண்ட நிதியப் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | 155,970,670 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வைப்புக் கணக்குகள் தொடர்பான தகவல் மற்றும் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தப்படாமை

2022 திசெம்பர் 31 இல் 26 கமநல சேவைக் குழுக்கள் மற்றும் 26 கமநல வங்கிகளால் 02 அரச வணிக வங்கிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்குகளின் நிலுவைகள் மற்றும் அரச வங்கிகளில் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களாக முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை பற்றிய தகவல்கள் கீழே உள்ளன.

| | சேமிப்பு வைப்பு | நிலையான வைப்பு | நடைமுறை வைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| குழுக்கள் | 2,123,231 | 64,719,748 | 59,656,774 | 126,499,753 |
| கமநல வங்கிகள் | 29,880,717 | 34,759,636 | 4,290,573 | 68,930,926 |
| மொத்தம் | 32,003,948 | 99,479,384 | 63,947,347 | 195,430,675 |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எவ்வித வட்டி வருமானமொன்றும் பெறப்படாத நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா 63,947,347 ஆகும். | கமநல சேவைக் குழுக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு போதுமான அளவு பண மீதியொன்று வைக்க வேண்டியிருப்பதால், இவ்வாறு பணம் நடைமுறைக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | நிதிகள் மிகவும் பயனுள்ள முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | குறைந்த வட்டி வருமானமொன்று பெறப்படுகின்ற சேமிப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை மொத்தம் ரூபா 32,003,948 ஆகும். அதன் பிரகாரம் பணம் பயனுள்ளதாக ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது | பதில் வழங்கப்படவில்லை. | நிதிகள் மிகவும் பயனுள்ள முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலஹிதியாவ கமநல சேவை குழுவில் காணப்பட்ட ரூபா 21,675 ஆன உரப் பற்றாக்குறைக்குக் காரணமான முன்னாள் விற்பனை | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எழுதுநரின் 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 21,675 ஆன பெறுமதியும் அத்துடன் 13 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற இருப்புத் பற்றாக்குறைக்கு அறவிட வேண்டிய ரூபா 528,722 ஆன தொகையும் அறவிடுவதற்கு முடியாமல் காணப்பட்டன. | | |
| (ஆ) | பல்லேவெல கமநல சேவைக் குழுவின் முன்னாள் விற்பனை எழுதுநரிடமிருந்து 16 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 44,788 ஆன தொகை அறவிடப்படுவதற்கு முடியாமல் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில், படல்கம குழுவின் உரம் மற்றும் விதை நெல் பற்றாக்குறைக்காக அறவிட வேண்டிய ரூபா 461,639 தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பியகம கமநல சேவைக் குழுவின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கையிருப்பு பற்றாக்குறையான ரூபா 477,915 ஆன தொகை முன்னர் கையிருப்பிற்கு பொறுப்பாக இருந்த அதிகாரியிடமிருந்து அறவிடப்படுவதற்கு முடியாமல் காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வின் அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. . | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 பெப்ரவரி 01 ஆம் திகதிய கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 01/2011 இன் பிரகாரம், முதலில் வழங்கப்பட்ட புத்தகங்களை மீளப் பெற்றுக் கொண்டதன் பின்னரே பயன்படுத்தப்படுகின்ற அடியிதழ் புத்தகங்கள் மீண்டும் வழங்கப்பட வேண்டிய போதிலும், 05 கமநல சேவைக் குழுக்களின் அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு பரீட்சிக்கப்பட்டபோது ஏக்கர் வரி | பதில் வழங்கப்படவில்லை. | அடியிதழ் புத்தகங்கள் தொடர்பான கட்டுப்பாடொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிப்பதற்கு விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டு புத்தகங்கள் மீண்டும் குழுவிற்கு ஒப்படைக்கப்படாமல் இன்னுமொரு பற்றுச்சீட்டு புத்தகம் குறிப்பிட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2021-22 பெரும்போகத்தில் நிலைய மட்டத்தில் சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்காக, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் ரூபா 100,000 பெறப்பட்ட தொகையில் 05 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 337,928 ஆன தொகையொன்று மிகுதியாக இருந்தது. இத்தொகை குறிப்பிட்ட செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படாததுடன், அது திருப்பிச் செலுத்தப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மிகுதி பணம் எதிர்காலத்தில் சேதனப்பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும். . | மீதமுள்ள தொகை சேதனப்பசளை செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது மீதமுள்ள தொகை திருப்பி செலுத்தப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | 20 கமநல சேவைக் குழுக்களுக்கான மொத்த தரிசு நிலத்தின் அளவு 5068 ஏக்கர் ஆக இருந்ததுடன், 2022/23 பெரும்போகத்தில் நெல் மற்றும் ஏனைய பயிர்களுடன் பயிரிடப்பட்ட பரப்பளவு 1521 ஏக்கராக வரையறுக்கப்பட்டிருந்தது. | தண்ணீர் பற்றாக்குறை, நீர்ப்பாசனப் பிரச்சனைகள், வெள்ள அச்சுறுத்தல்கள், நகரமயமாக்கல் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் காரணமாக தரிசு நெல் பயிர்ச்செய்கை குறைந்த அளவிலேயே காணப்பட்டது. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி, ஒவ்வொரு நிலமும் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 17 கமநல சேவை குழுக்களில் பல ஆண்டுகளாக முன் கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 5,546,719 ஆன பெற வேண்டிய 55 நிலுவைத் தொகைகளை அறவீடுவதற்கும் ரூபா 416,344 ஆன செலுத்த வேண்டிய 02 நிலுவைத் தொகைகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறிப்பிட்ட கடன் நிலுவைகள் மீளப்பெறக்கூடியதாக இருந்தாலும், அறவிடப்படாத கடன் நிலுவைகள் குறித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து காணப்பட்டு வருகின்ற பெற வேண்டிய மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்,ஆதனம் பொறி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கமநல சேவைக் குழுக்களில் ஒரு குபோடா உழவு இயந்திரம், ஒரு கை ட்ராக்டர், 02 தண்டு வெட்டும் இயந்திரங்கள், 02 தாவர நாற்று மேடைகள், ஒரு திரவம் தெளிக்கும் இயந்திரம் என்பன விளைவற்றுக் காணப்பட்டன. | பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கும் ஏனைய சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல் தொடர்பான மேலதிக பணிகளை மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தக்கூடிய சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் ஏனைய சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அகற்றப்பட வேண்டும். |

**3.6 செயற்திட்டம் அல்லது முலதன வேலைகளில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவைக் குழுக்களில் 89 நீர்ப்பாசன பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு செயற்திட்டங்கள் மற்றும் 05 குழுக்களில் 28 விவசாய மற்றும் கட்டிட மறுசீரமைப்பு பணிகள் மீளாய்வாண்டில் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, 2022 ஆம் ஆண்டுக்கான மூலதன விடயங்களுக்கான ஒதுக்கீடுகள் பெறப்படாததால், மீளாய்வாண்டில் அவை முன்மொழியப்படடிருந்த போதிலும், அவற்றைச் செயற்படுததுவதற்கு முடியாதிருந்தது. | நீர்ப்பாசனத் தொழில் மற்றும் நீர்ப்பாசன மறுசீரமைப்பு பணிகள் மற்றும் நிர்மாண பணிகள் நாளதுவரையாக்கப் பட்டு மேற்கொள்ளப்படுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 26 கமநல சேவை குழுக்களில் 720 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவுகள் காணப்பட்டதுடன் , அவற்றில் 186 பிரிவுகளுக்காக விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அரசாங்கம் புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள வேண்டாம் என கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்திருப்பதால் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தால் முடியவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய , NG/SP/SGD/17 ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு ”2030 நிகழ்ச்சி நிரல்” குறித்து குழுக்கள் அறிந்திருக்காமையால் தமது விடயப்பரப்பின் கீழ் வரும் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதற்கான மைல்கற்கள் மற்றும் இலக்குகளின் சாதனையை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் ஆகியவை அடையாளம் காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அது தொடர்பான விழிப்புணர்வொன்று இல்லை என்பதாக பதில் இருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதற்கான நிலைமைகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய அமைப்புகளில் வைப்புத்தொகையை அதிகரிப்பதற்கு 26 கமநல சேவைக் குழுக்களிலும் கமநல வங்கிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும். | விவசாய அமைப்புகளின் வைப்புத்தொகையை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 24 கமநல சேவைக் குழுக்களின் கமநல வங்கிகளில் 991 கடன் பட்டோாகளுக்கான ரூபா 23,398,566 ஆன கடன்கள் காலாவதியாகிய கடன்களாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இந்த கடன்களை அறவிடுவதற்கு கமநல நியாய சபை மூலம் மற்றும் நீதி மன்ற நடவடிக்கைகள் மூலம் நடவடிக்கைகளை தொடர்வதற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 4/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரரம் கடன் தொகை உரிய திகதியில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |